விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 1 ரஜப் 27 இதழ்: 3
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-2-1991

## முல்லையில் முன்னேற முயன்ற படைகளை மறித்து தாக்குதல்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று பல முனைகளிலும் முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

இராணுவத்தினருக்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்களிலிருந்து உக்கிரமான குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இரா (4ம் பக்கம் பார்க்க)

## கண்ணி வெடி; கவசவாகனம் வெடித்து சிதறியது

(திருமலை)
திருகோணமலை மாவட்டத்தில் புலிகள் நேற்று நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் கவசவாகனம் ஒன்று வெடித்துச் சிதறியதுடன் அதில்வந்த இராணுவத்தினரும் கொல்லப்பட்டார்கள்.

நேற்று புல்மோட்டை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது ஆட்டுமா பானத்தில் வைத்து புலிகள் இந்தக் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினார்கள்.

இத் திடீர்த் தாக்குதலில் கவசவாகனம் வெடித்துச் சிதறி முற்றாகச் சேதமடைந் (4-ம் பக்கம் பார்க்க)

★ வவுனியாவில் தொடர்ந்து மோதல்

# 10 ராணுவம் பலி, 10 பேர் காயம்

# புலிகளால் ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)
வவுனியாப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் நடைபெற்ற மோதலில் இராணுவ தரப்பில் பத்துப்பேர் கொல்லப்பட்டதுடன் பத்துப்பேர் காயமடைந்தனர், பல ஆயுதங்களும், வெடி மருந்துகளும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது.

நேற்றுமுன்தினம் பகல் 11-00 மணிக்கு நொச்சிமோட்டைக்கும்-டிதக்குளத்துக்குமிடையில் முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் இடைமறித்து கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இம்மோதலில் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமுமடைந்தனர்.

மாலை 5 மணிவரை நடைபெற்ற இம்மோதலில் புலிகள் தரப்பில் எதுவித உயிரிழப்பும் ஏற்படவில்லை எனக் கூறப்படுறது

இம்மோதலில் இராணுவத்தினரிடமிருந்து ரி-81-3, ரி56-2-1, ரி 56-1-1, ரி 81 மகஸின்-4, ரி 56 மகஸின்-4, ரவைகள் 200 போன்ற ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

பின்வாங்கிய படையினர் மருக்காரம்பளை ஊடாக முகாமுக்குச் சென்றனர்: டிறநாட்டன் பகுதியிலுள்ள வயல்வெளியில் இரு (4-ம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள்களுடன் 25 லொறிகள் வந்தன

(பூநகரி)
கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களுடன வந்து நொச்சிமோட்டையில் தரித்து நின்ற லொறிகளில் 25 லொறிகள் நேற்றிரவு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டன.

இந்த லொறிகள் நேற்றிரவு நொச்சிமோட்டையிலிருந்து மடுவிதி வழியாக பூநகரிக்கு வந்துசேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## ஒருவர் பலி 6 பேர் காயம்

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நேற்று நடத்திய தாக்குதலொன்றில் அரச படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஆறுபேர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 500 பொதுமக்கள் கைது 25 பேர் தடுத்து வைப்பு!

(வவுனியா)
வவுனியாப் பகுதியில் நேற்று முன்தினம் 500 பொதுமக்களை இராணுவத்தினர் கைதுசெய்து முகாமுக்குச் கொண்டுசென்றனர்.

கைதுசெய்யப்பட்ட பொதுமக்களில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்களும அடங்குவர்.

முகாமுக்குக் கொண்டு சென்ற பொதுமக்களில் 25 பேரைத் தடுத்து வைத்துக் கொண்டு மற்றவர்களை விடுதலை செய்ததாகவும் கூறப்படுகின்றது. (வி)

## பலாலியிலிருந்து ஷெல் வீச்சு ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்து வலலாயப் பகுதியை நோக்கி நேற்றுக் காலையில் இருந்து மாலை வரை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் பலியானார். பல வீடுகள் சேதமடைந்தன.

குடிமக்கள் வாழும் பகுதியை நோக்கி 30 தடவைகள் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

வீரகத்தி கருணாகரன் (38 வயது) என்பவரே இந்த ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டவராவர். (ரி-வி)

## நிறைகுறைவாகவும் தரமில்லாமலும் பாண் தயாரிப்போர் மீது கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
நிறை குறைவாகவும், தரமில்லாமலும் பாண் தயாரிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: (4ம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் இன்னல் குறித்து கவலைப்பட தமிழக மக்களுக்கு உரிமையுண்டு

(சென்னை)
"ஈழத் தமிழர்களின் இன்னல்கள் குறித்து கவலைப்பட தமிழக மக்களுக்கு உரிமையுண்டு. அதேவேளை கவலைப்படக் கூடாதென்று கூற மத்திய அரசுக்கு உரிமை (4ம் பக்கம் பார்க்க)

## நிலத்துக்கடியில் பாதுகாப்பு மாளிகையில் சதாம் குடும்பம்!

(பக்தாத்)
ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் எந்தவிததாக்குதலுக்கும் ஈடு கொடுக்கும் வகையில் நிலத்திற்கடியில் மாளிகையொன்று கட்டியிருக்கின்றார்.

சுமார் 10 வருடத்திற்கு முன்னர் 1981ல் கட்டப்பட்ட இந்த மாளிகையின் செலவினம் 65 லட்சம் மில்லியன் டொலராகும். (4ம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டுவீச்சில் நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
ஓமந்தையில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் அதே இடத்தைச் சேர்ந்த வே. சின்னத்தம்பி (68 வயது), புங்குடுதீவைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளர் எஸ். சின்னத்துரை ஆகியோர் உட்பட நால்வர் காயமடைந்தனர். (4ம் பக்கம் பார்க்க)

## 29 போராளிகள் கைது

(சென்னை)
தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களில் 29 ஈழப்போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளார் (4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

தவக்காலத்திற்கேற்பசெபப் புத்தகங்கள் விற்பனைக்குண்டு ''ஆவேமரியா'' காணிக்கை மாதா கைத்தொழிலகம் 115, மூன்றும் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். இளைவாலூர் (சி 4335)

வீட்டுச் சலவைக்குச் சக்தி மிக்க மின்னைவற் திரவச வர்க்காரம் (Liquid Soap), விலக்கெரிக்க உத்தமான வேப்பெண்ணெய் யாழ்.நகர் ப.நோ. கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது. (எ-1093)

க. பொ. த. (சா) பரீட்சைக்கும், ஏனைய பொதுப் பரீட்சைகளுக்கும் அனுபவம் மிக்க ஆசிரியரால் தனிப்பட்ட முறையில் ஆங்கிலம் பயிற்றப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- J. A. John, 25, சோமசுந்தரம் அவெனியூ, கண்டிக்குளி. (சி-4352)

## நாடக நூல்கள்

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/- முதலாம்பிள்ளை 30/- மாணவர்களும் நடிப்பதற்கேற்ற நடிப்புக்குறிப்புகள், விளக்கங்கள், விமர்சனங்களும் கொண்ட 19 வானொலி நாடகங்கள் எங்கும் கிடைக்கும். (சி 4351)

## தவறிவிட்டது

15-1-91 அன்று சாவகச்சேரி தேங்காய் சந்தையில் எனது மணிபேர்சுடன் பின்வரும் பொருட்கள் தவறிவிட்டன. அடையாள அட்டை இல; 290070678V சயிக்கில் திறப்பு, பற்றுச்சீட்டுப் பத்திரம், பாக்கர் கவிப்பேனை, 2184/-ரூபா பணம் கண்டெடுத்தோர் முக்கியபொருட்களை (பணம்தவிர) பத்திரிகை காரியாலயத்திலோ அல்லது எனது விலாசத்துக்கோ அனுப்புமாறு தயவாக வேண்டுகிறேன். மா. தெய்வேந்திரம் சாமியார் திடற்புலம், வசாவிளான். (சி 4349)

## சனி மாற்றம்

வாக்கியப்படி 10-02-91ல் சனீஸ்வரன் மாற்றமடைகின்றார். மேடம்-பத்தில், இடபம்-ஒன்பதில், மிதுனம்-எட்டில், கடகம்-ஏழில், சிங்கம்-ஆறில், கன்னி-ஐந்தில், துலாம்-நான்கில், விருச்சிகம் - மூன்றில், தனு-இரண்டில், மகரம் - ஒன்றில், கும்பம்-பன்னிரண்டில், மீனம். பதினொன்றில், இவை இரண்டரை ஆண்டுகளுக்கு நிகழும்; உங்கள் எதிர்காலம் அறிய சந்தியுங்கள் V.A. சிவராசா B.A., Phil சோதிடர். 152 B, அரசடி றோட் கந்தர் மடம். (சி 4350)

## வரலாறு

விற்பனையாகின்றது. வரலாறு-ஆண்டு-11, வரலாறு ஆண்டு-6 (புதிய பாடத்திட்டம்). ஆக்கியோன்: ந தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும்பெற்றுக்கொள்ளலாம். (கி-4317)

## திருமணசேவை

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் இத் திருமணங்களை நிறைவேற்ற விடாமுயற்சி தேவை. உங்களுக்குத் தகுதியான மணமகன், மணமகளைத் தேடி அலையாது நாடவேண்டிய இடம்: புதிய மாங்கல்யா மரீரி சேர்விஸ், 16/16, வன்புரம், கொழும்புத்துறை. (சு 4344)


## மண்ணெண்ணெய் பறிமுதல்

(நாவற்குழி)

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகாமையில் வைத்து லீற்றர் 100 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 35லீற்றர் மண்ணெண்ணெய் விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. (107)


## கெயர் ஸ்தாபனம் பால்மா உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை, தாளையடி, ஊர்காவற்றுறை, மண்டைதீவு, குருநகர் ஆகிய கிராமங்களிலுள்ள 3000 குழந்தைகளுக்கு பால்மா வழங்கும் திட்டத்தை அகில உலக கெயர் ஸ்தாபனம், யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்துடன் இணைந்து செயற்படுத்திவருகிறது. (153)


## மீண்டும் ஜனனிப்புக்காக.....

## 41-வது நாளில்



\- வருண் -

ஜனனம்: 14-04-1990

மரணம்: 04-01-1991

வருண்!
எங்கள்
இல்லற நந்தவனத்தில்
முளையெடுத்த
இளைய செடி...!
பயணிப்பின்
இறுதி வரை!

இவன்
எமக்காகவே
உதிர்த்துச்சென்ற
நினைவுப் பூக்களை
நாம் நுகர்ந்தபடி...

வருண் குட்டியின் பிரிவால் துயருறும்;

அம்மா, அப்பா, பப்பி மாமா, அம்மம்மா, தாத்தா, அப்பப்பா, பூட்டி, அன்ரிமார், அக்காமார், மதன் அண்ணா, சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார்.

Address:
K. Navendan,
See Str. - 57,
8708 - Mannedorf,
Switzerland.

தகவல்:
பாலசண்முகம் சிவபாலன்,
வட அல்வை.

(ஏ-1091)


# வவுனியாவில் குடிமனைகள் மீது கடும் விமானதாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வவுனியாப் பகுதியில் இராணுவ நடவடிக்கை தொடரப்பட்ட இடங்களில் பொம்மர்கள், ஹெலிகொப்டர்கள் ஆகியன ஒன்றிணைந்து அகோரத் தாக்குதல்களை நிகழ்த்தியபடி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளும் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இராணுவத் தாக்குதலினால் காயப்பட்டோர், உயிரிழந்தோரின் விபரங்களும் கிடைக்கவில்லை.

விமானத் தாக்குதல்கள் பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கியே கடுமையாக இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

# மானிப்பாய் பாடசாலைகளில் பதுங்கு குழிகள்

(மானிப்பாய்)

மானிப்பாய் பகுதிப் பாடசாலைகளில் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

குடாநாட்டில் தற்பொழுது இடம்பெற்றுவரும் விமானக் குண்டுத் தாக்குதல்களிலிருந்து பாடசாலைகளிலுள்ளவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே இப்பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று மற்றைய பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் பதுங்கு குழிகள் அமைத்தால் அது ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பாதுகாப்பாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (71)

# யாழ். தொழில் நுட்பக் கல்லூரி: புதிய கல்வியாண்டுக்கு மாணவர் தெரிவு

(அராலி)

1991-ம் புதிய கல்வியாண்டிற்கு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிக்கான புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் இம்மாதம் பத்தொன்பதாம் திகதிமுதல் அடுத்தமாதம் ஐந்தாம் திகதிவரை நடைபெறவுள்ளன.

புதிய கல்வியாண்டிற்கு பகுதிநேர விரிவுரையாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் பொறியியல், ஆங்கிலம், வணிகம் ஆகிய துறைகளுக்கு இம்மாதம் 15-ம். 16-ம், 17-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

புதிய கல்வியாண்டுக்கான வகுப்புகள் மார்ச்மாதம் 18-ம் திகதிமுதல் ஆரம்பமாகவுள்ளன.

பொதுவாக நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கடிதத்துக்குரியவர்கள் வதியும் பிரதானதபாலகங்களிற்சேர்ப்பிக்கப்பட்டு வருகின்றன என்று தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் திரு. சி இராஜேந்திரா அறிவித்துள்ளார்.

## இராசிபலன்

13-02-1991

புதன்கிழமை

மேடம்;- தொழில் சிறப்பு, சகோதர உதவி, குடும்ப மகிழ்ச்சி, பாராட்டு.

இடபம்;- மறைமுகப் பகை, குடும்ப மோதல், உபசாரக் குறைவு, தொழில் நஷ்டம்.

மிதுனம்;- வேண்டாத உறவு, நரம்புப் பலவீனம், வாக்குக்கலகம், பகை.

கடகம்:- நற்செயல், காரிய பலிதம், வாக்குவன்மை, கல்வியால் புகழ்.

சிங்கம்:- தொழில் மாற்றம், குடும்ப சுகம், இனசன வரவு, பயணம்.

கன்னி:- புதிய பிரச்சினை, தொழில் பிணக்கு. குடும்பப் பிரிவு, கவலை மிகுதி.

துலாம்:- கைப்பொருள் செலவு, கடன் கமை, குடும்பப் பிணக்கு, அசதி.

விருச்சிகம்;: நல்லோருதவி, பணவரவு, காரிய சித்தி, குடும்ப மகிழ்ச்சி.

தனுசு: கவேகமற்றசெயல், இனசனப் பகை, தியாக சிந்தை, மனச்சுமை.

மகரம்; வேண்டியவை கைகூடல், சுபகாரியம், வாக்கு வன்மை, வெற்றி.

கும்பம்; கருத்து மோதல், தொழில் பகை, அந்நிய வாசம், தொந்தரவு.

மீனம்: சான்றோர் ஆசி, வஸ்திர லாபம், தாயன்பு, மனமகிழ்ச்சி.

\- ஜோஸ்யர்

## தேர்த் திருவிழா

(நல்லூர்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா இன்று 13ம் திகதியும், தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறவுள்ளன.

## பயணிகள் தவிப்பு

(பூநகரி)

வவுனியாவில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தால் பயணிகளின் பெறுமதிமிக்கபொருட்களை மினிபஸ்களில் விட்டு, ஓடிவந்தனர்; இவர்கள் பூநகரியில் தங்கள் பொருட்களை எதிர்பார்த்து நிற்கின்றனர். (23)

### காணி உச்சவரம்புச் சட்டத்தின் கீழ்

# பறிமுதலான தமிழரின் தென்னந் தோட்டங்கள் சிங்களவர்களுக்குப் பங்கீடு

(நேற்றைய தொடர்ச்சி)

தென் இலங்கையிலிருந்து திட்டமிட்டு கல்லோயா பள்ளத்தாக்கில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் எத்தகையவர்கள் என்பதை 1956ம் ஆண்டு ஜுன் 5ம் திகதி இனக்கலவரங்கள் உலகறியச்செய்தது.

கல்லோயா பள்ளத்தாக்கில் ஏற்படுத்தப்பட்டகுடியேற்றத் திட்டங்களில் குடியேறிய தமிழ்மக்களுக்கு சிங்கள மக்கள் விபரிக்க முடியாத அநீதிகளை விளைவித்தனர். நூற்றுக்கணக்கில் தமிழ் குடியேற்றவாசிகளைக்கொன்றுர்கள்.

1956-ம் ஆண்டைத் தொடர்ந்து அப்பகுதியிலிருந்து பலவந்தமாக பலதமிழ் குடும்பங்கள் சிங்கள காடையர்களாலும், சிங்கள குடியேற்ற வாசிகளாலும் வெளியேற்றப்பட்டன.

1958-ம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து பல தமிழ்க் குடியேற்றக் கிராமங்களை சிங்களவர்கள் பலாத்காரமாக அபகரித்துவிட்டார்கள்.

1959ம் ஆண்டு தேர்தல் தொகுதி நிர்ணய சபையினால் கல்லோயா அபிவிருத்திச்சபை பிரதேசத்தை உள்ளடக்கிய அம்பாறை தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது,

## தமிழ் விவசாயிகள் நிலம் சிங்களவரால் ஆக்கிமிப்பு

1960ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தல் கிழக்கு மாகாணத்திலிருந்து முதன்முதலாக சிங்கள பிரதிநிதி மேற்படி தொகுதியிலிருந்து நாடாளுமன்றம் சென்றுர். இதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தை உருவாக்க சிறிலங்கா அரசு முயற்சி எடுத்தது.

### அம்பாறை மாவட்டம்

1961ம் ஆண்டு பெப்ரவரியில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கச்சேரிகள் முன்பாக நடைபெற்ற சத்தியாக்கிரக இயக்கத்தை தொடர்ந்து அம்பாறை, கல்முனை, நிந்தாவூர், பொத்துவில் ஆகியதேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளை மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகத்தினுள் இருந்து அகற்றி மேற்படி 4 தொகுதிகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தை அம்பாறை மாவட்டமாக 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி சிறிலங்கா அரசு பிரகடனப்படுத்தியது.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளிருந்த பிந்தனைப்பற்று வடக்கு, பிந்தனைப்பற்று தெற்கு ஆகிய கிராமங்களை மொனறாகலை மாவட்டத்துடன் சிங்களக்குடியேற்றத்திற்கு வசதியாக சேர்த்துக்கொண்டது; மேற்படி கிராமங்களிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் போதியளவு சிங்களக்குடியேற்றங்களை செய்தபின்னர் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதி மீண்டும் அம்பாறை மாவட்டத்துடன் மேற்படி கிராமங்களை சிறிலங்கா அரசு இணைத்துக்கொண்டது.

**கிராம விஸ்தரிப்பு என்ற போர்வையில் அம்பாறை மாவட்டத்தில் தமிழரின் உறுதிக்காணிகள் பறிமுதல் செய்யப்பட்டன. பொத்துவிலில் தமிழரின் 50 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டு சிங்கள மீனவர்களுக்கு வழங்கப் பட்டது.**

### சிங்கள நிர்வாகம்

அம்பாறை நகரில் அம்பாறை மாவட்டத்தின் கச்சேரி அமைக்கப்பட்டது. அம்பாறை மாவட்ட நிர்வாகம் சிங்கள மொழிமயமாக்கும் முயற்சிக்கு இது கால்கோளாக அமைந்தது

1963ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 5 பிரிவு காரியாதிகாரிகள் பகுதிகள் இருந்தன. பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, கரவாகும் நிந்தா

**மா. துரைநாயகம்**

ஊர்பற்றும்சம்மாந்துறைபற்று ஆகிய தமிழ் காரியாதிகாரி பிரிவுகளும், வேவகம்பத்து என்று அழைக்கப்படும் சிங்களம் பேசும் காரியாதிகாரிபிரிவும் காணப்பட்டன.

1963ம் ஆண்டு ஜூலைமாதம் 8ம் திகதி நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 2 லட்சத்து 11,732 பேராகும்; இதில் சிங்களவர்களின் எண்ணிக்கை 61,996 பேராகும்.

1950ம் ஆண்டு தொடங்கி 1963ம் ஆண்டுவரை கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் குடியேற்றப்பட்ட சிங்களவர்களின் எண்ணிக்கை மேற்படி குடிசனமதிப்பீட்டு அறிக்கையின்பிரகாரம் தெட்டத்தெளிவாகின்றது.

### அத்துமீறி குடியேற்றம்

அம்பாறை மாவட்டம் உருவாகிய பின்னர் சிங்கள மக்கள் மேற்படி மாவட்டத்திலுள்ள அரச நிலங்களில் அத்துமீறியும் குடியேறியுள்ளார்கள். அரச காணிகளில் சட்டத்தைமீறிக் குடியேறிய சிங்கள மக்கள்மீது சிறிலங்கா அரசு நடவடிக்கைஎடுப்பதற்குப் பதிலாக அந்நிலங்களை அவர்களுக்கு சொந்தமாக்கியது.

### தமிழர் நிலம் சுவீகரிப்பு

தமிழர்களுக்கு சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் கரும்பு செய்கை அபிவிருத்தி என்ற போர்வையில்அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டன; பின்னர் இந்நிலங்கள் சிங்கள குடியேற்றவாசிகளுக்கு சட்டபூர்வமாக அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. ஹிங்குராணை, மல்வத்தை போன்ற கிராமங்களில் மேற்படி சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன;

கிராம விஸ்தரிப்பு என்ற போர்வையில் அம்பாறை மாவட்டத்தில் சிங்கள ஆக்கிரமிப்பு தமிழர்களின் உறுதிக்காணிகளையும் பறிமுதல் செய்துள்ளது, பொத்துவிலைச் சேர்ந்த உல்லை என்னும் கிராமத்தில் தமிழரின் 50 ஏக்கர் நிலத்தை சுவீகரித்து அந்த நிலத்தில் சிங்கள மீனவர்களுக்கு வாடிகள் அமைத்துக் கொடுத்தார்கள். மல்வத்தையிலுள்ள தொட்டாச்சிங்கிவட்டையில் பௌத்த பிக்கு ஒருவரின் மேற்பார்வையில் தமிழர்களின் காணிகளை சிங்களவர்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து அந்நிலங்களை பின்னர் சட்டபூர்வமாக தங்களுக்கு சொந்தமாக்கியுள்ள நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளது;

அம்பாறை மாவட்டத்தில் 1000 சதுரமைல் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது; சிறிலங்கா அரசு அம்பாறை மாவட்டத்தில் மேற்கொண்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தின் தாக்கம் மிகவும் பாரதூரமானதாகும்.

காணி உச்சவரம்பு சட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்தில் அரசுடமை ஆக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு சொந்தமான தென்னந்தோட்டக் காணிகள் சிங்கள மக்களுக்கு பங்கிடுசெய்து விநியோகிக்கப்பட்டுள்ளது; கொண்டைவெட்டுவான், அக்கரை வெளி போன்ற இடங்களில் தமிழ்பேசும் விவசாயிகளின் சொந்த பூமிகளும் அவர்கள் திருத்திச்சாகுபடிசெய்த நிலங்களும் அரசின் உதவியோடு பலாத்காரமாக ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களமக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது;

(தொடரும்)

## முஸ்லிம் நாடுகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தின்

# ஈரான் போரில் குதிக்கும்!

(பக்தாத்)

வளைகுடா யுத்தத்தில் எந்த ஒரு முஸ்லிம் நாட்டையும் இஸ்ரேல் தாக்கினால் ஈரான் வளைகுடாப் போரில் குதிக்கும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதில்லை என்ற உத்தரவாதத்தை அமெரிக்காவுக்கு வழங்க இஸ்ரேல் மறுத்துள்ளது.

ஈராக் பொதுமக்கள் மீது அமெரிக்க நேசப் படைகள் தாக்குவதையிட்டு சோவியத் யூனியன் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் இடம்பெறுமானால், சோவியத்தின் நடவடிக்கை பற்றி மறுபரிசிலனை செய்ய நேரிடுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைமைத்துவப் பயிற்சி கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

நல்லூர், யாழ்ப்பாணம் உ. வ. அ. பிரிவுக்குட்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்காகத் தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினரால் நடாத்தப்படவிருக்கும் தலைமைத்துவப் பயிற்சிநெறி சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் ம. ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## நிலத்துக்கடியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாளிகையின் பிரதான வாசல் கதவு மூன்றுமீற்றான் எடையுள்ள உருக்கினாலானது. இம்மாளிகை 18,000 மீற்றர் விஸ்தீரணம் உள்ளது.

மாளிகையின் சுவர்கள் 6 அடி அகலமுடையவை மாத்திரமன்றி அணுஆயுத கதிர்வீச்சிலிருந்தும், குண்டுவீச்சிலிருந்தும் பாதுகாக்கும் வகையில அமைக்கப்பட்ட நவீன கவசம் பொருந்தியதாகும்!

ஒரே நேரத்தில் 6 தொலைக்காட்சிகளுக்கு பெட்டிகள்க்க கூடிய வகையில் தொலைக்காட்சி கலையரங்குகள் அமைக்கப் பெற்றுள்ளன,

பிரதான வாசல் விருந்தினரைச் சந்திக்கும் பகுதி, தடாகம், குளியல் அறை, படுக்கை அறை, சிறுவர் தங்கும் அறை, பிரதான உறங்கும் அறை, ஜனாதிபதியின் அறை போன்றன அமைக்கப்பட்டுள்ளன.

சதாம் தனது மனைவி சஜிதாவுடனும், இரண்டு புதல்வர்களுடனும் (23 வயது. 26 வயது), மூன்று மகள்மாருடனும் (25 வயது. 20 வயது, 17 வயது) மிகவும் பாதுகாப்பான இந்த மாளிகையில் வாழ்ந்து வருகிறார். (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/160306/81,

## முல்லையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...ணுவத்தினர் முன்னேற முடியாத நிலையில் இருந்தனர்.

இம் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர். (வி)

## கண்ணிவெடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...துடன் அதில் வந்த படையினரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி-வி)

## 29 போராளிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

...கள் என்று இந்திய வானொலியில் தெரிவிக்கப்பட்டது.

சோதனையின்போது ஆறு கைத்துப்பாக்கிகளும், ஆறு வயர்லெஸ் கருவிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## ஈழத் தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

...வில்லை" என்று முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. மு. கருணாநிதி மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

"விடுதலைப் புலிகளுக்கும் அஸாம் மாநிலப் போராளிகள், ஆந்திரப் பிரதேச நக்ஸலைட் ஆகியோருக்கிடையே தொடர்பு இருப்பதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்காந்த் தெரிவித்த கருத்தை ஏற்கமுடியாது." (பூ)

## விமானக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிறு காலை எட்டு மணிக்கு இடம்பெற்ற இரு பொம்பர் விமானத்தாக்குதலின்போது உயிர்தப்பியுள்ளனர். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராம சபை, சின்னத்துரை பேக்கரி மற்றும் 3 வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

ஓமந்தையில் நேற்றுமுன்தினம் ஹெலி ஒன்று காலையிலிருந்து மாலை வரை கடும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டபடி இருந்தது.

இராணுவத்தினர் ஓமந்தைப் பகுதியை நோக்கி பயங்கரத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஓமந்தையைச் சேர்ந்த மேலும் இருவர் காயமடைந்ததாக இங்கு வருவோர் தெரிவித்தனர். (சு)

## உற்பத்திகுழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிராமிய உற்பத்திக் குழுக்களின் இணைப்புக் கூட்டம், இம்மாதம் 16ம் திகதி சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு குருநகர் பாஷால் வீதியில் உள்ள கார்மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## 6 நாட்கள் கண் சிகிச்சை கிளினிக்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கண் சிகிச்சைக் கிளினிக், ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் காலை 11-30 மணி முதல் 12-00 மணிவரை அவசர நோயாளிகளைக் கண் சிகிச்சைப் பிரிவில் டாக்டர்களைச் சந்திக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் டாக்டர் திருமதி கண்ணுத்துரையும், செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் டாக்டர் குகதாசனும் கிளினிக்கில் பார்வையிடுவார்கள். (சி)

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சடலங்களும், மாணிக்கவளவுப் பகுதியில் ஒரு சடலமும் அனாதரவாகக் கிடப்பதாகவும் கூறப்படுகின்றது.

வவுனியா முகாமிலிருந்து காலை 10 மணியிலிருந்து 11 மணிவரை இடைவிடாது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் உபதபால் நிலையம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உட்பட பல வீடுகளும் சேதமடைந்தன [வ]

## நிறை குறைவாகவும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் ஜனவரி 29ம் திகதி நடாத்திய கூட்டத்தில் 350 கிறும் நிறையுடைய பாண் தரத்துடன் தயாரிப்பதாக தீர்மானிக்கப்பட்டது. ஆனால் 350 கிறாமுக்கு குறைவாகவும் தரம் குறைந்தவையாகவும் பாண் தயாரிக்கப்படுவதை பல இடங்களில் அவதானிக்க முடிந்தது. நிறை குறைவாகவும், தரம் குறைவாகவும் பாண் தயாரிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறோம்."